### மூடர் கூட்ட அரசின் விளம்பர வெறியால்

# கடைமடையில் கருகும் பயிர்கள்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வேதனை!

**சென்னை, அக். 16-**

**"மூடர் கூட்ட அரசின் விளம்பர வெறியால் கடைமடையில் பயிர்கள் கருகுகின்றன" என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வேதனை தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முகநூல் பதிவு வருமாறு:-

மேட்டூரில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் டெல்டாவின் கடைமடை பகுதிகளுக்கு வந்து சேராமல் சம்பா பயிர்கள் காய்கின்ற நிலையில், தற்போது அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்படவுள்ளதால் பயிர்களை எப்படி காப்பாற்றுவது என்று புரியாமல் டெல்டா விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்படாததால் ஏற்கனவே குறுவை சாகுபடி பொய்த்தது. இப்போது சம்பாவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது.

மேட்டூர் அணையில் நீர் இருப்பு குறைவாக உள்ளதால், செப்டம்பர் 1ஆம் தேதி தண்ணீர் திறப்பதற்கு பதிலாக கொஞ்சம் தாமதமாக தண்ணீர் திறக்க வேண்டும் அப்போது தான் நெல்மணி முளைத்து வருகின்ற காலகட்டத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருக்காது என்று டெல்டா விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.



**அவசரகதியில்**
**மேட்டூரில் தண்ணீர் திறப்பு!**

விவசாயிகளின் நடைமுறை சிக்கல் புரியாமல், Reels வெறி கொண்டு அவசரகதியில் இந்த Dummy CM தண்ணீர் திறந்துவிட்டார். இப்போது உரிய நேரத்தில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகுகின்றன.

எந்த ஒரு திட்டமிடலும் இல்லாமல் விவசாயிகளின் பேச்சையும் கேட்காமல் தன்னிச்சையாக செயல்பட்டு குறுவை சம்பா இரண்டையும் இல்லாமல் செய்திருக்கிறது இந்த கோமாளி சர்க்கார்.

ஏற்கனவே அரிசி பருப்பு விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. தினத்தந்தியின் இன்றைய முதல் பக்க தலைப்புச்செய்தியே விலைவாசி உயர்வு பற்றித்தான் என்பது முதல்வருக்கு தெரியாதா?

**விவசாயிகள் பிரச்சினைகளைத் தீர்க்க முதல்வர் ஆய்வுக் கூட்டம் நடத்துவாரா?**

இப்படிப்பட்ட சூழலில் நிர்வாகத்திறனற்ற இந்த ஆட்சியாளர்களால், உணவு உற்பத்தி மேலும் பாதித்து, விலைவாசி இன்னும் உயருகின்ற அபாயம் ஏற்பட்டுள்ளது.

வேளாண்துறைக்கு செயலாளர் இல்லாததை நாம் சுட்டிக்காட்டிய பிறகு, வேளாண் செயலாளரை நியமித்த முதலமைச்சர், விவசாயிகள் பிரச்சினையை தீர்ப்பதற்கான Review Meetingஐயும் நாம் சொன்ன பிறகு தான் நடத்துவாரா?

இப்பிரச்சினை குறித்து உடனே ஆய்வுக்கூட்டங்களை நடத்தி, டெல்டாவை வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அனைத்து நிவாரண உதவிகளையும் இந்த ஆட்சியாளர்கள் உடனடியாக வழங்க வேண்டும்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் கூறியுள்ளார்.


## வெற்றி விலை உயர்வுத் திட்டம்!





### முன்னாள் அமைச்சர் ஐ.பெரியசாமி சிறப்புரையாற்றுகிறார்!

# திண்டுக்கல் கிழக்கு மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்கள் அர.சக்கரபாணி – ஐ.பி.செந்தில் குமார் அறிவிப்பு!

திண்டுக்கல், அக். 16–

திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் வருகிற 18.10.2026, ஞாயிற்றுக் கிழமை, காலை 10.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், முன்னாள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான இ.பெரியசாமி எம்.எல்.ஏ., சிறப்புரையாற்ற, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அவைத் தலைவர் மூ.காமாட்சி மற்றும் திண்டுக்கல் மேற்கு மாவட்ட அவைத் தலைவர் தி.மோகன் ஆகியோரின் தலைமையிலும் மறுசீரமைப்பிற்கான தலைமைக் கழக பிரதிநிதிகள்



செல்வம் எம்.பி. மற்றும் பிரபு கஜேந்திரன் ஆகியோரின் முன்னிலையிலும் திண்டுக்கல், மாவட்ட தி.மு.க.



அலுவலகமான 'கலைஞர் மாளிகையில் நடைபெறவுள்ளது.

அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1. நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகம் மறுசீரமைப்பு – சம்பந்தமாக.

2. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் அர.சக்கரபாணி, ஐ.பி. செந்தில் குமார் ஆகியோர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### "காடம்பாறை நீர் மின்திட்டம்"

# திட்டமிட்டு இருட்டடிப்பு செய்யப்படும் முத்தமிழறிஞர் கலைஞரின் சாதனைகள்!

வால்பாறை உச்சியில் உள்ள "நீரார் அணை கட்டப்பட்டது காமராஜரால். ஆனால் இதனால் தமிழகத்திற்கு யாதொரு பிரயோஜனமும் இல்லை. ஏனெனில் அணை மதகுகள் திறக்கப்பட்டதும் தண்ணீர் கேரள எல்லையைத் தொட்டுவிடும். இந்தத் தண்ணீர் தான் அதிரம்பள்ளி நீர்வீழ்ச்சிக்கான major source.

அதன்பின் ஆட்சிக்கு வந்த தி.மு.க.வின் பொதுப்பணித் துறை அமைச்சராக பதவியேற்ற கலைஞர் அவர்கள் அந்த அணைக்கு எதிர்ப்புறம் மலையைக் குடைந்து அந்தத் தண்ணீரை சோலையாறு அணைக்குக் கொண்டு செல்லத் திட்டம் தீட்டி அடிக்கல் நாட்டி பணிகளைத் தொடர்ந்தார்.

20அடிக்கு 20அடி என்ற அளவில் "D

### வலைதளத்தில் வலம் வருவது!

போன்ற அமைப்பில் 8.5 கி.மீட்டர் தூரத்துக்கு ஒரே நேர்கோட்டில் வெட்டப்பட்ட குகைக் கால்வாய் இது. பராமரிப்புப் பணிகளுக்காக இந்தக் குகைக்குள் முழு 8.5 கி.மீட்டருக்கும் இன்றும் டிராக்டரில் பயணிக்கிறார்கள்.

அடுத்து பேரறிஞர் மறைய முதல்வராக கலைஞர் பதவியேற்க, சாதிக்பாட்சா அவர்கள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்து இத்திட்டத்தை முடித்து வைத்தார். கலைஞர் திறந்து வைத்தார். இந்தக் காலகட்டம் 1968 முதல் 1972 வரை ஆகும்.

இந்தத் தண்ணீர் மலைக்குகையை விட்டு வெளியேறிய பின்னர் அதே பாதையில் "நீர் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அது தான் "காடம்பாறை நீர் மின் உற்பத்தித் திட்டம் ஆகும். இதுவும் தி.மு.க தான் திட்டமிட்டு நிறைவேற்றியது. பின்னர் சோலையார் அணையிலிருந்து மலைப் பகுதியில் திறந்த வெளிக் கால்வாய்கள் மூலம் தண்ணீர் கொண்டு செல்லப்பட்டு ஆழியாறு அணையைச் சென்றடைகிறது. இதன்மூலம் தான் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பகுதிகள் பாசன வசதி பெற்றன. இது வரலாறு.

தி.மு.கவினருக்கே இது புதிதாகத் தோன்றலாம். பதிவில் சொன்னபடி இதுதான் உண்மை. கலைஞரின் சாதனைகள் திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன.

முகநூலில் வந்த பதிவு.


